www.Padasalai.Net www.TrbTnpsc.com

V10T

விருதுநகர் மாவட்டம்

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2025

-----

வகுப்பு 10

தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

பகுதி -I

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. (சரியான விடை தேர்க) 15×1=15

1) 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள், இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது ..........
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

2) 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப் பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

3) தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு, எதிர்த்துப் போரிடல் ............. திணையாகும்.
அ) வெட்சித்திணை ஆ) வஞ்சித்திணை இ) காஞ்சித்திணை ஈ) நொச்சித்திணை

4) கூத்தராற்றுப்படை என்று அழைக்கப்படும் நூல் ..........
அ) நெடுநல் வாடை ஆ) மலைபடுகடாம்
இ) காசிக்காண்டம் ஈ) சிறுபாணாற்றுப்படை

5) 'அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை' - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

6) கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது
அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்
ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

7) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

8) வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி .........
அ) உவமை ஆ)தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

9) விடை .............. வகைப்படும்
அ) 8 ஆ) 7 இ) 6 ஈ) 5

10) அறம் கூறும் அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது ........
அ) அகநானூறு ஆ) புறநானூறு
இ) கலித்தொகை ஈ) சிறுபாணாற்றுப்படை

11) 'உனக்குப்பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்' - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
இ)முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14,15) விடை தருக

'பழுதுஇல் செய்வினைப் பால்கெழு மாக்களும்;
குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்
வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்;

12) சீர்மோனையை எழுதுக
அ) பழுதுஇல் - மாக்களும் ஆ) இசைத்து - இருக்கையும்
இ) வழுவின்றி - வழித்திறம் ஈ) பழுதுஇல் - பெரும்பாண்

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

13) பாடலை இயற்றியவர் யார்?
அ) கு.ப.ராஜகோபாலன் ஆ) கம்பர்
இ) பரஞ்சோதி முனிவர் ஈ) இளங்கோவடிகள்

14) இப்பாடல் இடம்பெறும் நூல் .........
அ) சிலப்பதிகாரம் ஆ) கம்பராமாயணம்
இ) திருவிளையாடற் புராணம் ஈ) காசிக்காண்டம்

15) 'வழு' - என்ற சொல்லின் பொருள் .........
அ) பவளம் ஆ) சிற்பி இ) குற்றம் ஈ) துணி

## பகுதி -II (மதிப்பெண் – 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண்: 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **4×2=8**

16) **விடைகளுக்கு ஏற்ற வினாக்கள் அமைக்க**
அ) 'ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு' என்கிறார் மணவை முஸ்தபா.
ஆ) தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில் தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது

17) குறிப்பு வரைக. அவையம்

18) 'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த திணையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக

19) மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக

20) சாந்தமான தொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக

21) 'அருமை ......' எனத் தொடங்கும் குறளை அடிபிறழாமல் எழுதுக

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5×2=10**

22) 'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ்' -இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக

23) **தொடரில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க**
அ) கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்
ஆ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்

24) **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
ஒலித்து

25) புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப்படுத்துக

26) **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக**
அ) மலை - மாலை ஆ) தான் - தாம்

27) வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய் மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

28) **கலைச்சொற்கள் தருக.**
அ) Tornado ஆ) Belief

## பகுதி -III (மதிப்பெண் – 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

29) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

30) 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'
இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க

31) **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

வடகிழக்குப் பருவ காலங்களில், தாழ்வுமண்டலமாய்த் தவழ்ந்து புயலாய் மாறிப் புறப்படுவேன். ஆற்றலுடன் வீறுகொண்டு பயணிக்கத் தொடங்கினால் எண்ணாத் தடுக்க யாராலும் இயலாது; மழையாகப் புயலாகத் தடம் பதிப்பேன் நான்.

என் ஆற்றலை 'வளி மிகின் வலி இல்லை' என்று ஐயூர் முடவனார் சிறப்பித்துள்ளார். இதுபோன்றே மதுரை இளநாகனார் கடுங்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று என் வேகத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அ) கடுங்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று காற்றின் வேகத்தைப் பற்றிக் குறிப்பிட்டவர் யார்?

ஆ) காற்று, தன் ஆற்றலைப் பற்றி ஐயூர் முடவனார் சிறப்பித்துக் கூறும் வரி எது?

இ) காற்று எவ்வாறு புயலாய் மாறிப் புறப்படுவதாகக் கூறுகிறது?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**
**வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்க.**

32) 'முதல்மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்

33) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது.

34) **அடிபிறழாமல் எழுதுக**

அ) 'புண்ணியப் புலவீர் ......... எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணப் பாடல்.

**(அல்லது)**

ஆ) 'நவமணி வடக்க .......... ' எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

35) நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், 'இலட்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்' என்றார். 'இதோ சென்றுவிட்டேன்' என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, 'என்னடா விளையாட வேண்டுமா?' என்று கேட்டேன். என் தங்கையும் அங்கே வந்தாள். அவளிடம், 'நீயும் இவனும் விளையாடுங்கள்' என்று கூறினேன். அவிழ்த்து விடப்பட்ட இலட்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள்.

இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளை பட்டியலிட்டு எழுதுக

36) 'குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை
- இக்குறட்பாவின் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்குக

37) 'நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்'
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக

## பகுதி -IV (மதிப்பெண் – 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5×5=25**

38) அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக

**(அல்லது)**

ஆ) வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய, இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக

39) அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக

**(அல்லது)**

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக

www.Padasalai.Net www.TrbTnpsc.com



40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



41) கம்பர் தெரு, கதவு இலக்கம் 25, சாத்தூரில் வசிக்கும் கண்ணன் என்பவரின் மகள் சுமதி என்பவர் சாத்தூரில் உள்ள பொதுநூலகத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தம்மை சுமதியாகப்பாவித்து படிவத்தை நிரப்புக.

42) அ) அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்திருப்பீர்கள். இவை போன்று நீவிர் கண்ட பல்வேறு பழமையான நினைவுச்சின்னங்களைப் பாதுகாத்துப் பராமரித்துக் காக்கும் வழிமுறைகள் ஐந்தினை எழுதுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க

i) Education is what remains after one has forgotten what one has learned in school. - Albert Einstein

ii) Tomorrow is often the busiest day of the week - Spanish Proverb

iii) It is during ourdarkest moments that we must focus to see the light - Aristotle

iv) Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts - Winston Churchill.

## பகுதி -V (மதிப்பெண் – 24)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3×8=24

43) அ) தமிழின் இலக்கிய வளம் - கல்விமொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிற துறைக் கருத்துக்கள் - தமிழுக்குச் செழுமை

மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித்தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக

44) அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணணைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

(அல்லது)

ஆ) நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக

மகளிர் நாள் விழா

இடம் : பள்ளிக் கலையரங்கம் நாள்: 08.03.2019

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை.

45) அ) முன்னுரை - பிறப்பு - கல்வி - விண்வெளிப் பயணம் - கொலம்பியா விண்கல நிகழ்வு - விருதுகளும் அங்கீராங்களும் - முடிவுரை

(அல்லது)

ஆ) உங்கள் பள்ளியில் நடைபெறும்நாட்டு நலப் பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

\- - - - - - -

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com